# வர்த்தக வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும்
# தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - பொல்கொல்ல

## பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பக்கோரல்

2001 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட கண்டி, பொல்கொல்லயில் உள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் காணப்படும் பின்வரும் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பிற்கு தகுதிவாய்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி வெற்றிடங்கள்**

| தொ. இல | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பள அளவு (முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 01 இன் படி 2025.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்) | 2026 ஆம் வருடம் செலுத்தப்படும் ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 01 | சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் | 01 | AR 2 - 2025 | ரூ.133,220-10x3,600-169,220 | ரூ.116,763/= |
| 02 | உதவி ஆராய்ச்சியாளர் | 01 | AR 1 - 2025 | ரூ.91,650-10×2,480-15×3,450-168,200 | ரூ.81,675/= |
| 03 | உதவிப் பணிப்பாளர் (தங்குமிடம்) | 01 | MM 1-2 - 2025 | ரூ.94,170-10×2,480-15×3,450-170,720 | ரூ.83,803/= |
| 04 | உதவிப் பணிப்பாளர் (நிதி) | 01 | MM 1-2 - 2025 | ரூ.94,170-10×2,480-15×3,450-170,720 | ரூ.83,803/= |
| 05 | உதவிப் பதிவாளர் | 01 | MM 1-2 - 2025 | ரூ.94,170-10×2,480-15×3,450-170,720 | ரூ.83,803/= |
| 06 | கணினி பதிப்பாளர் | 01 | MA 5-3 - 2025 | ரூ.79,440-10×2,040-20×2,230-144,440 | ரூ.71,367/= |
| 07 | அலுவலக உதவியாளர் | 05 | PL 1 - 2025 | ரூ.40,500-10×450-10×490-7×540-15×590-62,530 | ரூ.38,488/= |

**2. ஒவ்வொரு விண்ணப்பதாரரும்**

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்

ii. சிறந்த மனநலம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

iii. பதவியின் கடமைகளை சிறப்பாகச் செய்யவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றும் உடல் மற்றும் மனரீதியான வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**3. வேலைவாய்ப்புக்கான நிபந்தனைகள்**

i. ஆட்சேர்ப்பு செய்யப்படும் பதவிக்கான நிரந்தரப் பணி இடம் பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமாகும், மேலும் தேவை ஏற்படும் போது நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கடமைகளை பொறுப்பேற்று செய்வதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

**4. தகைமைகள்**

i. உரிய பதவிக்கு விண்ணப்பிக்கும் தகுதியினை பெறுவதற்கு, விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதிக்குள் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**5. விண்ணப்பிக்கும் முறை :**

மேற்கூறிய பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவைப்படும் தகைமைகள் மற்றும் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.nicd.edu.lk ஐ பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

i. பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இந்த நிறுவகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் மூலம் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும், மேலும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

ii. மேலும், அரசாங்கம் / அரச கூட்டுத்தாபனங்கள் / சட்டப்பூர்வ நிறுவனங்கள் / உயர்கல்வி நிறுவனங்களில் ஏற்கனவே பணிபுரியும் விண்ணப்பதாரர்கள், தங்களது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத்தின் தலைவர் மூலமாக அனுப்புதல் வேண்டும்.

iii. விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

iv. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2026.08.24 ஆம் திகதியாகும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை முடிவுத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் "பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம், பொல்கொல்ல" என்ற முகவரிக்கு அனுப்பும் படி வேண்டிக்கொள்கிறோம்.

v. தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், முழுமையான விபரங்களை கொண்டிராத விண்ணப்பங்கள், அடிப்படைத் தகைமைளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள், மேலும் அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டதற்கான சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களால் உறுதிசெய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் முறையாகச் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

vi. இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பில் எந்த வகையிலும் செல்வாக்கு செலுத்துவது முறையற்றதாகக் கருதப்படுகிறது.

பி.கு. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி அல்லது மேற்குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பான விடயங்களில் வேறு ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அவை நிறுகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் புதுப்பிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி,**
**தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்,**
**பொல்கொல்ல**
**2026.08.09**

tamilguru.lk